# 6, 7, 8$^{TH}$ STD பொதுத்தமிழ் (புதிய பாடத்திட்டம்)

1. முடியாத செயலையும் முடித்துக் காட்டுபவர் ____________ முடியாது என்பவர் ____________
   a. மேலவர், கீழோர் b. பெரியோர், சிறியோர்
   c. நேர்மையவர், நேர்மையற்றவர் d. ஊக்கமுடையோர், ஊக்கமற்றோர்
   e. விடை தெரியவில்லை

2. தமிழ் உரைநடை வடிவங்களில் பொருந்தியுள்ளது எது?
   1. கட்டுரை 2. புதினம் 3. சிறுகதை 4. நாவல்
   a. அனைத்தும் b. 1, 2 மட்டும் c. 1, 2, 4 மட்டும்
   d. 1 மட்டும் e. விடை தெரியவில்லை

3. பாரதிதாசனார் தமிழுக்கு வைத்த பெயர்களுள் பொருந்தாதது எது?
   a. அமுது b. நிலவு c. வான் d. மணம் e. விடை தெரியவில்லை

4. ஔவையார் பற்றிய கூற்றுகளில் சரியான கூற்றினை கண்டறிக?
   1. மன்னற்குத் தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
   2. இவர் ஆத்திச்சூடி, மூதுரை, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.
   3. வினையே ஆடவர்க்கு உயிர் ஆகும்.
   4. மூதுரை என்னும் சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்று பொருள்.
   a. 1 மட்டும் சரி b. 1, 3 மற்றும் 4 சரி c. 3, 4 மட்டும் சரி
   d. 1, 2 மற்றும் 4 சரி e. விடை தெரியவில்லை

5. நான்கு வகையான சிற்பக்கலை வடிவமைப்புகளும் காணப்படும் ஓரே இடம் எது?
   a. மாமல்லபுரம் b. தஞ்சாவூர் c. கங்கை கொண்ட சோழபுரம்
   d. காஞ்சிபுரம் e. விடை தெரியவில்லை

6. பொருத்துக:

| | |
|---|---|
| A. மின்னஞ்சல் | 1. E. Magazine |
| B. மின் நூலகம் | 2. E. Book |
| C. மின் நூல் | 3. E - Mail |
| D. மின் இதழ் | 4. E – Litrary |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |

b. 2 3 1 4

c. 3 4 2 1

d. 3 2 4 1

e. விடை தெரியவில்லை

7. எந்த ஆண்டிலிருந்து காமராசர் பிறந்த நாளான ஜீலை – 15 ஆம் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

a. 2008 b. 2006 c. 2007 d. 2004 e. விடை தெரியவில்லை

8. சீரிளமை – பிரித்து எழுதுக.

a. சீர் + இளமை b. சீரமை + இளமை c. சீரிய + இளமை
d. சீரி + இளமை e. விடை தெரியவில்லை

9. இந்திய நூலகவியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர்?

a. இரா. அரங்கசாமி b. இரா. அரங்கநாதன்
c. உவே. சாமிநாத ஐயர் d. சி.வை. தாமோதிரம் பிள்ளை
e. விடை தெரியவில்லை

10. ”ஆற்றுணா வேண்டுவது இல்” இத்தொடர் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது.

a. பழமொழி நானூறு b. புறநானூறு c. அகநானூறு
d. தொல்காப்பியம் e. விடை தெரியவில்லை

11. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம் பெறாத சொல் எது?

a. மஞ்சள் b. வந்தான் c. கண்ணில் d. தம்பி e. விடை தெரியவில்லை

12. சரியான கூற்று எது?

a. கணிரின் சுவரில் ஓர் பாம்பு உள்ளது

b. கிணறின் சுவற்றில் ஒரு பாம்பு உள்ளது

c. கிணற்றின் சுவரில் ஓர் பாம்பு உள்ளது

d. கிணற்றின் சுவரில் ஒரு பாம்பு உள்ளது

e. விடை தெரியவில்லை

13. பின்வரும் வாக்கியங்களில் தவறானவற்றை கண்டறிக?

1. ஆசாரக் கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார்
2. பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர் கடத்தூர் ஆகும்
3. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
4. ஆசாரக் கோவை என்பதற்கு நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு என்று பொருள்.

a. 2 மட்டும் b. 3, 4 மட்டும் c. 2, 3 மட்டும்
d. மேற்கண்ட அனைத்தும் e. விடை தெரியவில்லை

14. கண்ணுறங்கு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

a. கண் + உறங்கு
b. கண்ணு + உறங்கு
c. கண் + றங்கு
d. கண்ணு + றங்கு
e. விடை தெரியவில்லை

15. ஏறு தழுவுதல் எந்த நிலத்திற்கான வீர விளையாட்டு ஆகும்?
a. மருதம்
b. குறிஞ்சி
c. பாலை
d. முல்லை
e. விடை தெரியவில்லை

16. "ழ" என்னும் எழுத்து
a. வல்ஞசுழி எழுத்து
b. இடஞ்சுழி எழுத்து
c. இட வலஞ்சுழி எழுத்து
d. வல இடஞ்சுழி எழுத்து
e. விடை தெரியவில்லை

17. தவறாக பொருந்தியவற்றை கண்டறிக.
a. எ, ய, ஆ, ஓ, ஏ - வினா எழுத்துகள்
b. மொழியின் முதலில் வருபவை - எ, யா
c. மொழியின் இறுதியில் வருபவை - ஆ, ஓ
d. மொழியின் முதலிலும் இறுதியிலும் வருபவை – ஏ
e. விடை தெரியவில்லை

18. பொருத்துக.
A. திகிரி — 1. ஆணைச் சக்கரம்
B. அளி — 2. கலவை
C. மயக்கம் — 3. வருவாய்
D. யாணர் — 4. கருணை

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 1 | 4 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

19. "நடுவு நின்ற நன்னெஞ்சினோர்" என்னும் பாடல் இடம் பெற்ற பத்துப்பாட்டு நூல் எது?
a. மதுரைக் காஞ்சி
b. பட்டினப்பாலை
c. முல்லைப்பாட்டு
d. குறிஞ்சிப்பாட்டு
e. விடை தெரியவில்லை

20. பாலொடு வந்து கூழொடு பெயரும் என்னும் பாடல் இடம் பெற்ற எட்டுத்தொகை நூல் எது?
a. நற்றிணை
b. அகநானூறு
c. புறநானூறு
d. குறுந்தொகை
e. விடை தெரியவில்லை

21. பாடல் வரிகளுக்கு ஏற்ப பொருத்துக:

A. விடிவெள்ளி 1. பஞ்சு மெத்தை
B. மணல் 2. ஊஞ்சல்
C. புயல் 3. போர்வை
D. பனிமூட்டம் 4. விளக்கு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 1 | 2 | 4 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

22. திராவிட நாட்டின் வானம்பாடி என்ற அடைமொழியால் அழைக்கப்படும் கவிஞர் யார்?
I. துரைராசு II முடியரசன் III. அரங்கசாமி IV. திரு.வி.க
a. I மற்றும் II b. I மற்றும் III c. I, II மற்றும் III
d. I மற்றும் IV e. விடை தெரியவில்லை

23. நடப்பாண்டுக்கான திருவள்ளுவர் ஆண்டைத் தேர்ந்தெடு?
a. 2053 b. 2054 c. 2051 d. 2052 e. விடை தெரியவில்லை

24. வெள்ளிப் பனிமலையின் மீது உலாவுவோம் - அடி
மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவோம். என்னும் பாடலின் ஆசிரியர் யார்?
a. பாரதிதாசன் b. வாணிதாசன் c. பாரதியார்
d. முடியரசன் e. விடை தெரியவில்லை

25. யாரை பத்திரமாகப் பாதுகாக்க வேண்டுமென்று காந்தியடிகள் கூறினார்?
a. உ.வே.சா b. இராஜாஜி c. திரு.வி.க
d. பாரதியார் e. விடை தெரியவில்லை

26. நாலடியார் என்ற நூலின் ஆசிரியர் யார்?
a. வீரமாமுனிவர் b. சமண முனிவர்கள் c. ஜி.யு, போப்
d. கால்டுவெல் e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

27. பொருத்துக:

| | |
|---|---|
| A. Sculptures | 1. சில்லுகள் |
| B. Chips | 2. ஒப்பனை |
| C. Make up | 3. சிற்றுண்டி |
| D. Tiffin | 4. சிற்பங்கள் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 4 | 3 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

28. பின்வரும் கூற்றுகளில் சரியானது அல்லாதது எது?

a. மொழிக்கு முதலில் வரும் மெய்யெழுத்துக்கள் 10. அவை க், ச், த், ப், ந், ம், ங், ஞ், ய், வ் ஆகும். இவை தனித்து சொல்லுக்கு முதலில் வாரா. உயிருடன் இணைந்தே மொழிக்கு முதலில் வரும்.

b. மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் மொழிக்கு முதலில் வாரா

c. ஆய்த எழுத்து மொழிக்கு இடையில் மட்டுமே வரும்

d. ங, ஞ, ய, வ வரிசையிலுள்ள அனைத்து உயிர்மெய் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்

e. விடை தெரியவில்லை

29. நாமக்கல் கவிஞர் பற்றிய கூற்றுகளைக் கவனிக்க.

1. தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முகத் தன்மை கொண்டவர்
2. தமிழக அரசு இவரை முதல் அரசவைக் கவிஞராகவும், சட்ட மேலவை உறுப்பினராகவும் நியமித்துச் சிறப்பித்தது
3. நடுவணரசு இவருக்கு பத்மபூசண் விருதளித்துப் போற்றியுள்ளது.
4. “எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்“ என்ற பாடல் நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது

a. அனைத்தும் சரி b. 1, 2, 4 சரி 3 தவறு c. 1, 2, 3 சரி 4 தவறு
d. 1, 3, 4 சரி 2 தவறு e. விடை தெரியவில்லை

30. பொருத்துக:

| | |
|---|---|
| A. எழுத்திலக்கணம் | 1. Orthography |
| B. மொழியியல் | 2. Phonology |
| C. ஒலியியல் | 3. Journalism |
| D. இதழியல் | 4. Linguistics |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 4 | 2 | 3 |
| b. | 4 | 1 | 2 | 3 |



APPOLO STUDY CENTRE

c. 4 2 1 3
d. 4 3 1 2
e. விடை தெரியவில்லை

31. "______________ ல் விழுந்த ______________ க்கு அதுவே சொர்க்கம்" சொலவடையை நிறைவு செய்க.
a. அகழி, மீன் b. ஆறு, முதலை c. அகழி, முதலை
d. கிணறு, தவளை e. விடை தெரியவில்லை

32. "சுட்ட பழங்கள்" என்று குறிப்பிடப்படுபவை
a. மண் ஒட்டிய பழங்கள் b. சூடான பழங்கள்
c. பறவைகள் தின்ற பழங்கள் d. அணில் கொறித்த பழங்கள்
e. விடை தெரியவில்லை

33. ஐகாரம் சொல்லின் இறுதி, முதல், இடையில் வரும்பொழுது மாத்திரை அளவு முறையே
a. 1, 2, 1½ b. 1, 1½, 1 c. 1½, 1, 1
d. 1, 1, 1 e. விடை தெரியவில்லை

34. சரியானது எது?
a. யானைக் கொட்டில் குதிரைக் கூடம்
b. யானைத் தொழுவம் குதிரைக் கூடம்
c. யானைக் கூடம் குதிரைத் தொழுவம்
d. யானைக் கூடம் குதிரைக் கொட்டில்
e. விடை தெரியவில்லை

35. கூற்று 1 : முத்துராமலிங்கருக்காக பசும்பொன்னில் ஆண்டுதோறும் அக்டோபர் 30-இல் தமிழக அரசு விழா எடுக்கிறது.
கூற்று 2: தமிழகச்சட்டமன்றத்தில் அவரது சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது
கூற்று 3 : இந்திய நாடாளுமன்ற வளாகத்திலும் சிலை வைக்கப்பட்டுள்ளது.
a. அனைத்தும் சரி b. கூற்று 1, 3 சரி, 2 தவறு
c. கூற்று 1, 2 சரி, 3 தவறு d. கூற்று 1 சரி, 2, 3 தவறு
e. விடை தெரியவில்லை

36. பண்புள்ள விலங்கு எது?
a. நாய் b. பூனை c. புலி d. யானை e. விடை தெரியவில்லை

37. பசும்பொன் முத்துராமலிங்கத்தினை பாராட்டியவர்களில் பொருந்தாதது எது?
1. "வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப்பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உண்டாக்கியவர்" – பெரியார்
2. 'முத்துராமலிங்கரின் வீரம்மிக்க பேச்சு விடுதலைப் போருக்கு மிகவும் உதவும்' – காமராசர்

3. ‘அவர்பேசத் தொடங்கியதும் சிங்கத்தின் முழக்கம் போல இருந்தது’’ – அண்ணா
4. ‘உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித்துணிச்சல் பெற்றவர்’ - இராஜாஜி

a. 1, 4 மட்டும் b. எதுவுமில்லை c. 1 மட்டும்
d. 4 மட்டும் e. விடை தெரியவில்லை

38. பொருத்துக:

A. இல்முன் 1. இடக்கரடக்கல்
B. நுனிக்கிளை 2. மங்கலம்
C நன்காடு 3. இலக்கணப்போலி
D. கால் கழுவி வந்தேன் 4. இலக்கண முடையது

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 3 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

39. எட்டுத்தொகை நூல்களை பாடல்கள் எண்ணிக்கையோடு பொருத்துக:

A. நற்றிணை 1. 100
B. குறுந்தொகை 2. 401
C. பதிற்றுப்பத்து 3. 149
D. கலித்தொகை 4. 400

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

40. கூற்று 1 : வடமொழி எழுத்துகளைத் தமிழில் மாற்றி எழுதுவதை தற்பவம் என்பர். எ.கா. விஷம் - விடம்
கூற்று 2 : வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவதை தற்சமம் என்பர். எ.கா. சக்கரம்

a. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு b. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
c. கூற்று 1, 2 இரண்டும் சரி d. கூற்று 1, 2 இரண்டும் தவறு

41. பிசிராந்தையர் நாடக நூலுக்காக பாரதிதாசன் சாகித்ய அகாடமி விருது பெற்ற ஆண்டு

a. 1967 b. 1969 c. 1971 d. 1968 e. விடை தெரியவில்லை

42. ‘குட்டித் தொல்காப்பியம் என அழைக்கப்படும் நூல்

a. நன்னூல் b. தொன்னூல் விளக்கம் c. நேமிநாதம்
d. இலக்கணவிளக்கம் e. விடை தெரியவில்லை

43. சுப்ரபாரதிமணியன் பற்றியக் கூற்றுகளில் சரியானது அல்லாதது எது?
a. 'பள்ளி மறு திறப்பு' என்ற கதையை எழுதியவர்
b. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, இயற்கை வளங்களை பாதுகாத்தல் போன்ற கருத்துகளில் சிறுகதை, புதினம், கட்டுரை முதலியவற்றை எழுதியுள்ளார்.
c. 'கனவு' என்ற அரசியல் இதழை நடத்தி வருகிறார்.
d. பின்னல், வேட்டை, தண்ணீர்யுத்தம், புத்துமண், கதை சொல்லும்கலை ஆகியவை இவரது நூல்களாகும்.
e. விடை தெரியவில்லை

44. பகுபதி உறுப்பிலக்கணம் காண்க: பாடு + வ் + ஆர்; இதில் 'ஆர்' என்பது
i. முன்னிலை வினைமுற்று விகுதி ii. படர்க்கை வினைமுற்று விகுதி
iii. உயர்திணை வினைமுற்று விகுதி iv. அஃறிணை வினைமுற்று விகுதி
v. உயர்திணை வினைமுற்று விகுதி
a. i, iv சரி b. ii, iii, v சரி c. i, iv, vi சரி
d. iii, v, i சரி e. விடை தெரியவில்லை

45. ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினர் என்ற செய்தி இடம்பெற்றுள்ள நூல்
a. மணிமேகலை b. பரிபாடல் c. நெடுநல்வாடை
d. புறம் e. விடை தெரியவில்லை

46. பொருத்துக:
A. கலம்காரி ஓவியங்கள் 1. புதுக்கோட்டை
B. ஓலைச்சுவடி ஓவியங்கள் 2. தஞ்சாவூர்
C. தந்த ஓவியங்கள் 3. தஞ்சாவூர்
D. கண்ணாடி ஓவியங்கள் 4. ஆந்திரா
E. சுவர் ஓவியங்கள் 5. கேரளா

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 5 | 2 | 1 |
| b. | 4 | 2 | 1 | 3 | 5 |
| c. | 4 | 3 | 1 | 2 | 5 |
| d. | 4 | 5 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

47. பொருத்துக:

A. கற்கும் முறை — 1. செயல்
B. உயிர்க்கு கண்கள் — 2. காகம்
C. விழுச்செல்வம் — 3. பிழையில்லாமல் கற்றல்
D. எண்ணித்துணிக — 4. எண்ணும் எழுத்தும்
E. கரவா கரைந்துண்டும் — 5. கல்வி

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 1 | 5 |
| b. | 3 | 2 | 1 | 5 | 4 |
| c. | 3 | 4 | 1 | 5 | 2 |
| d. | 3 | 4 | 5 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

48. பொருந்தாதது எது?

a. திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி - திருஞானசம்பந்தர்
b. தன்பொருநைப் புனல்நாடு - சேக்கிழார்
c. பதியெழு அறியாப் பழங்குடி - இளங்கோவடிகள்
d. திங்கள் நாள்விழா மல்கு திருநெல்வேலி - திருநாவுக்கரசர்
e. விடை தெரியவில்லை

49. அங்கவை, சங்கவை எந்த வள்ளலின் புதல்விகள்?

a. காரி b. ஓரி c. பாரி d. பேகன் e. விடை தெரியவில்லை

50. ‘தமிழ் வேதம்’ என்றழைக்கப்படும் நூல்

a. திருவாய்மொழி b. திருமந்திரம் c. திருப்பாவை
d. தேவாரம் e. விடை தெரியவில்லை

51. திருநெல்வேலி சீமை என்று குறிப்பிடப்படுவது இன்றைய எந்தெந்த மாவட்டங்கள் இணைந்த பகுதியாகும்?

a. திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி b. திருநெல்வேலி, தூத்துக்குடி
c. திருநெல்வேலி, கன்னியாகுமரி d. திருநெல்வேலி, தென்காசி
e. விடை தெரியவில்லை

52. பொருத்துக:

A. விளைநிலம் — 1. உண்மை

B. விதை 2. இன்சொல்
C. களை 3. ஈகை
D. உரம் 4. வன்சொல்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 3 |
| b. | 1 | 4 | 3 | 2 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 2 | 4 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

53. 'செல்வத்து பயனே ஈதல்'' என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடியவர்.
a. நக்கீரர் b. பரணர் c. இடைக்காடனார்
d. ஔவையார் e. விடை தெரியவில்லை

54. ஒரு நாட்டின் அரணல்லாதது எது?
a. காடு b. வயல் c. மலை
d. தெளிந்தநீர் e. விடை தெரியவில்லை

55. பின்வருவனவற்றை ஆய்க
I. பொருளாகு பெயர் : பொருள் உறுப்புக்கு ஆகி வருவது
II. இடவாகுபெயர் : பொருள் இடத்திற்கு ஆகி வருவது
III. காலவாகுபெயர் : பொருள் காலத்திற்கு ஆகி வருவது
IV. சினையாகுபெயர் : உறுப்பு பொருளுக்கு ஆகி வருவது
a. I, II, III, IV சரி b. II, III சரி, I, IV தவறு
c. I, IV சரி, II, III தவறு d. I, II சரி, III, IV தவறு
e. விடை தெரியவில்லை

56. பொருத்துக:
A. மலைப்பொழிவு 1. கி.வா. ஜகந்நாதன்
B. மலை அருவி 2. தேனரசன்
C. மண்வாசல் 3. பிருந்தா
D. வீடுமுழுக்க வானம் 4. கண்ணதாசன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 1 | 2 | 3 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

57. பொருத்துக:
A. Charity 1. ஈகை

APOLLO STUDY CENTRE

B. Trust 2. அறக்கட்டளை
C. Dignity 3. கொள்கை
D. Doctrine 4. கண்ணியம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 2 | 1 | 3 | 4 |
| d. | 1 | 2 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

58. நாமக்கல் கவிஞர் நூல்களில் பொருந்தாதது எது?
I. மலைக்கள்ளன் - நாவல் (புதினம்)
II. என் கதை - சுயசரிதை
III. அவனும் அவளும் - கவிதை
IV. மாமன் மகள் - நாடகம்
a. III, IV மட்டும் b. I, III மட்டும் c. எதுவுமில்லை
d. அனைத்தும் e. விடை தெரியவில்லை

59. நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது போன்ற பொருள்களில் வரும் வேற்றுமை?
a. ஐந்தாம் b. ஆறாம் c. ஏழாம்
d. மூன்றாம் e. விடை தெரியவில்லை

60. அகற்றுவதற்கு அரியவையான பிறவித் துன்பங்களை தீர்க்கும் என நீலகேசி குறிப்பிடும் மருந்துகளின் எண்ணிக்கை?
a. இரண்டு b. மூன்று c. நான்கு
d. ஐந்து e. விடை தெரியவில்லை

61. 'கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலன் வேண்டாவாம்'' – என்ற பாடல் குமரகுருபரரின் நீதிநெறி விளக்கத்தின் எத்தனையாவது பாடல்?
a. பதினொன்றாம் பாடல் b. பதினான்காம் பாடல்
c. பதிமூன்றாம் பாடல் d. பதினாறாம் பாடல்
e. விடை தெரியவில்லை

62. கோமகள் பற்றிய வாக்கியங்களில் தவறானது?
a. இவரின் இயற்பெயர் இராஜலட்சுமி
b. இவரது 'அன்னை பூமி' என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது
c. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழ் அன்னை விருதினையும் பெற்றுள்ளார்.
d. 'பால் மனம்' எனும் கதை அ. வண்ண நீலவன் தொகுத்த மீதமிருக்கும் சொற்கள் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

e. விடை தெரியவில்லை

63. ‘மன்னும் உயிர்க் குணங்கள் எல்லாம்
குறைவறப் பெற்றவள் நீ
குலமாதே பெண்ணரசி’’ – என்ற பாடலின் ஆசிரியர் யார்?
a. மீரா b. ஆலங்குடி சோமு c. இரா. இளங்குமரனார்
d. இறையரசன் e. விடை தெரியவில்லை

64. பொருந்தாதது எது?
a. எறிந்த b. அழைத்த c. பாடும்
d. பாய்ந்து e. விடை தெரியவில்லை

65. “தென்னிந்திய சமூகச் சீர்த்திருத்தத்தின் தந்தை’’ என அழைக்கப்படுபவர்?
a. கால்டுவெல் b. காத்தவராயன் c. அயோத்திதாசர்
d. b மற்றும் c e. விடை தெரியவில்லை

66. திருவள்ளுவர் கல்லாதவரை எதனுடன் ஒப்பிடுகிறார்?
a. விலங்கு b. மரம் c. களர் நிலம்
d. a, c இரண்டும் e. விடை தெரியவில்லை

67. பின்வருவனவற்றுள் தவறான இணையைக் காண்க?
a. நான்காம் வேற்றுமை விரி - வல்லினம் மிகும்
b. உருவகம் - வல்லினம் மிகும்
c. திசைப்பெயர்கள் - வல்லினம் மிகாது
d. எதிர்மறைப் பெயரெச்சம் - வல்லினம் மிகாது
e. விடை தெரியவில்லை

68. வேற்றுமை உருபுடன் கூடுதலாக ஆக என்னும் அசை சேர்ந்து வருவது எத்தனையாவது வேற்றுமை?
a. மூன்றாவது b. நான்காவது c. ஐந்தாவது
d. ஆறாவது e. விடை தெரியவில்லை

69. பி.ஆர். அம்பேத்கர் குறித்த வாக்கியங்களில் தவறானது?
1. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராக இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கினார்.
2. இவர் 1891-04-04 ஆம் நாள் ராம்ஜி சக்பால் - பீமாபாய் இணையருக்குப் பதினைந்தாவது குழந்தையாகப் பிறந்தார்.
3. அம்பேத்கர் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவாதே என்னும் ஊரில் பிறந்தார்.
4. அம்பேத்கர் சதாராவில் உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார்.
a. 1 மற்றும் 4 b. 2 மற்றும் 3 c. 4 மட்டும்
d. 2 மட்டும் e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

70. மொழிக்கெல்லாம் மூத்தவளே! மூவேந்தர் அன்பே ! என்று செந்தமிழை பாடிய கவிஞர்?

a. பாரதியார் b. நாமக்கல் கவிஞர் c. து. அரங்கன்
d. தமிழன்பன் e. விடை தெரியவில்லை

71. தொல்காப்பிய மரபியல் நூற்பா படி ஐம்பூதங்களை வரிசைப்படுத்துக?

a. நிலம், தீ, நீர், வளி, விசும்பு b. நீர், தீ, நிலம், விசும்பு, வளி
c. நிலம், நீர், தீ, வளி, விசும்பு d. நீர், நிலம், தீ, விசும்பு, வளி
e. விடை தெரியவில்லை

72. மரகட்டில் என்ற சொற்புணர்ச்சியில் பொருந்தாதது எது?

a. தோன்றல் b. திரிதல் c. கெடுதல்
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

73. புள்ளிகளும் எழுத்துகளும்

i. ஓ· = ஓ
ii. ஒ = ஓ
iii. க. = கொ
iv. க.. = கோ
v. ..த = தா

a. I, ii சரி, iii, iv, v தவறு b. I, iii, iv சரி, ii, v தவறு
c. அனைத்தும் தவறு d. அனைத்தும் சரி
e. விடை தெரியவில்லை

74. செந்தமிழ் அந்தணர் தொகுத்த நூல் எது?

a. இலக்கண வரலாறு b. தேவநேயம்
c. தமிழிசை இயக்கம் d. தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகள்
e. விடை தெரியவில்லை

75. எழுத்துகளின் இடப்பிறப்பைச் சரியாகப் பொருத்துக?

A. மெல்லின மெய்கள் 1. மூக்கு
B. வல்லின மெய்கள் 2. கழுத்து
C. இடையின மெய்கள் 3. மார்பு
D. உயிர் எழுத்துகள் 4. கழுத்து

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 1 | 4 | 3 | 2 |
| d. | 2 | 1 | 4 | 3 |

e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

76. பின்வரும் வாக்கியங்களில் சரியாகப் பொருந்தாதது?

a. வானம்பாடி இயக்கக் கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர் மு. மேத்தா

b. கண்ணீர்ப் பூக்கள். ஊர்வலம், முகத்துக்கு முகம், வெளிச்சம் இல்லை, தேசப்பிதாவுக்கு ஒரே தெருப்பாடகனின் அஞ்சலி முதலியவை இவரின் கவிதை ஆகும்.

c. கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்

d. மு. மேத்தா எழுதிய 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு'' என்னும் புதுக்கவிதை நூலுக்காக 1997 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

e. விடை தெரியவில்லை

77. பொருத்துக:

| | |
|---|---|
| A. மெய்யொலி | 1. Consonant |
| B. உயிரொலி | 2. Vowel |
| C. ஒலியன் | 3. Pictograph |
| D. சித்திர எழுத்து | 4. Phoneme |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 1 | 2 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

78. 'செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்'' – என்ற ஓடை பற்றிய வாணிதாசனின் பாடல் இடம் பெற்றுள்ள நூல்?

a. எழில் விருத்தம்  b. எழிலோவியம்  c. கொடி முல்லை

d. தொடுவானம்  e. விடை தெரியவில்லை

79. மனிஷ் சாண்டி, மாதுரி, ரமேஷ் ஆகியோர் தொகுத்த காடர்களின் கதையை தமிழில் எழுதியவர்?

a. பி.ச. குப்புசாமி  b. வ. கீதா  c. சிவக்குமார்

d. பக்தவச்சல பாரதி  e. விடை தெரியவில்லை

80. விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று எந்த இடத்தில் மட்டும் வரும்?

1. தன்மை  2. முன்னிலை  3. படர்க்கை

a. அனைத்தும் சரி  b. 1, 2 மட்டும் சரி  c. 2, 3 மட்டும் சரி

d. 1, 3 மட்டும் சரி  e. விடை தெரியவில்லை

81. அயோத்திதாசர் எந்த ஆண்டு ''திராவிட மகாஜன சங்கம்'' என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்?

a. 1972  b. 1891  c. 1893  d. 1892  e. விடை தெரியவில்லை

82. தொடர்கள் பொருள் அடிப்படையில் எத்தனை வகைப்படும்?
a. இரண்டு b. மூன்று c. நான்கு
d. ஐந்து e. விடை தெரியவில்லை

83. பொருந்தாதது எது?
a. தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் - சுந்தரர் தேவாரம்
b. பாணன் சூடான் பாடினி அணியாள் - புறநானூறு
c. சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் - திருப்பாவை
d. குழல் இனிது யாழ் இனிது - திருக்குறள்
e. விடை தெரியவில்லை

84. ‘உண்’ என்பதன் தன்மை இறந்த கால வினைமுற்றுச் சொல் எது?
a. உண்டாய் b. உண்டது c. உண்டேன்
d. உண்டான் e. விடை தெரியவில்லை

85. புகழாலும், பழியாலும் அறியப்படுவது?
a. நடுவுநிலைமை b. அடக்கமுடைமை c. நாணுடைமை
d. பொறையுடைமை e. விடை தெரியவில்லை

86. ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றரே – என்ற நீலகேசி பாடலடிகள் இடம் பெற்றுள்ள சருக்கம்?
a. மொக்கலவாதச் சுருக்கம் b. தருமவுரைச் சுருக்கம்
c. புத்தவாதச் சுருக்கம் d. பூதவாதச் சுருக்கம்
e. விடை தெரியவில்லை

87. கவிமணி எத்தனை ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்?
a. 35 b. 36 c. 34 d. 32 e. விடை தெரியவில்லை

88. மூளையின் எப்பகுதி சரியில்லையெனில் வீட்டுக்குப் போக வழி தெரியாமல் திண்டாடுவோம் என்று சுஜாதா குறிப்பிடுகிறார்?
a. வலது பகுதி b. இடது பகுதி c. பின்பகுதி
d. நடுப்பகுதி e. விடை தெரியவில்லை

89. பாரதியார் நூல்களுள் பொருந்தாதது எது?
a. திண்டிய சாஸ்திரி b. நவதந்திர கதைகள் c. ஆறில் ஒரு பங்கு
d. சந்திரிகையின் கதை e. விடை தெரியவில்லை

90. ‘நல்ல பாம்பு’ இலக்கணம் காண்க?
i. எச்சம் ii. பெயரெச்சம்
iii. குறிப்பு பெயரெச்சம் iv. தெரிநிலை பெயரெச்சம்
a. i, ii மட்டும் சரி b. iii மட்டும் சரி c. i, ii, iii மட்டும் சரி

d. ii, iii மட்டும் சரி    e. விடை தெரியவில்லை

91. ‘கல்வி கரையில கற்பவர் நாள்சில’ என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?

a. நாலடியார்    b. நான்மணிக்கடிகை    c. நீதிநெறி விளக்கம்

d. அறநெறிச்சாரம்    e. விடை தெரியவில்லை

92. பொருத்துக:

A. காக்கை உட்காரப் பனம்பழம் விருந்தது போல - 1. ஒற்றுமையின்மை

B. கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல - 2. பயனற்ற செயல்

C. பசுமரத்து ஆணி போல - 3. தற்செயல் விடுப்பு

D. விழலுக்கு இறைத்த நீர் போல - 4. எதிர்பாரா நிகழ்வு

E. நெல்லிக்காய் முட்டையைக் கொட்டினாற் போல - 5. எளிதில் மனத்தில் பதித்தல்

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 2 | 5 | 1 |
| b. | 4 | 3 | 1 | 5 | 2 |
| c. | 4 | 3 | | 5 | 1 |
| d. | 3 | 4 | 5 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

93. பொருந்தாதது எது?

| | |
|---|---|
| i. Allergy | 1. நோய் |
| ii. Herbs | 2. சிறு தானியங்கள் |
| iii. Millets | 3. மூலிகைகள் |
| iv. Locust | 4. பறவை |
| v. Thicket | 5. தடிமன் |
| vi. Bud | 6. புதர் |

a. அனைத்தும் b. i, ii, iii மட்டும் c. ii, iii மட்டும்
d. எதவுமில்லை e. விடை தெரியவில்லை

94. பொருத்துக:

| | |
|---|---|
| A. இயற்கை ஓவியம் | 1. பத்துப்பாட்டு |
| b. இயற்கை வாழ்வில்லம் | 2. கம்பராமாயணம் |
| C. இயற்கை இன்பக்களம் | 3. திருக்குறள் |
| D. இயற்கை பரிணாமம் | 4. சிந்தாமணி |
| E. இயற்கை தவம் | 5. கலித்தொகை |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 5 | 4 |
| b. | 2 | 5 | 1 | 3 | 4 |
| c | 3 | 2 | 1 | 5 | 4 |
| d. | 1 | 3 | 5 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

95. சொல்லும் பொருளும் பொருத்துக:

| | |
|---|---|
| A. சேகரம் | 1. மிகவும் |
| B. வின்னம் | 2. சரியாக |
| C. வாகு | 3. சேதம் |
| D. மெத்த | 4. கூட்டம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 4 | 3 | 2 | 1 |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடை தெரியவில்லை

APPOLO STUDY CENTRE

96. எழுத்துக்களின் முயற்சி பிறப்பினைச் சரியாகப் பொருத்துக?

A. த், ந் — 1. மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால்

B. எ, ஏ — 2. மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால்

C. ர், ழ் — 3. மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால்

D. ற், ன் — 4. நாக்கின் அடி மேல்வாயின் அடியைப் பொருந்துவதால்

E. ய் — 5. வாயைத் திறப்பதனுடன் நாக்கின் அடி ஓரம் மேல்வாய்ப் பல்லைப் பொருந்துவதால்

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 5 | 1 | 4 |
| b. | 3 | 5 | 1 | 4 | 2 |
| c. | 3 | 5 | 2 | 1 | 4 |
| d. | 1 | 5 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

97. 'புற உலக ஆராய்ச்சிக்கு கொழுகொம்பு போன்றது'' என்ற திரு.வி.க. எதைக் குறிப்பிட்டுள்ளார்?

a. தமிழ்
b. அறிவியல்
c. கல்வி
d. தாய் மொழி
e. விடை தெரியவில்லை

98. பின்வருவனவற்றுள் காடு என்ற பொருட்படாத சொல் எது?

a. முதை
b. மிளை
c. சுரம்
d. சிற்றில்
e. விடை தெரியவில்லை

99. 'நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளீரோ' – எனும் பாடல் இடம்பெற்ற நூல் எது?

a. அகநானூறு
b. நற்றிணை
c. குறுந்தொகை
d. புறநானூறு
e. விடை தெரியவில்லை

100. அறிவியல் அறிஞர் கலிலியோ நிறுவிய கருத்து எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

a. திருவள்ளுவமாலை
b. அகநானூறு
c. புறநானூறு
d. குறுந்தொகை
e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE